# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

## தரம் 12

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து 250-300 சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.

அ. இலங்கையின் சுற்றுலாத்துறை

ஆ. தமிழ்மொழியின் வளர்ச்சி

இ. தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள்: யதார்த்தமும் கற்பனையும்

ஈ. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு

02. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பூஜைக்குப்பின் போஜனம் செய்தோம். அப்பால் தந்தையார் சிரமபரிகாரம் பண்ணிக்கொண்டார். பிறகு பிற்பகல் மூன்று மணியளவில் நானும் அவரும் பிள்ளையவர்களைப் பார்க்கப் புறப்பட்டோம். போகும் வழியில் ஸ்ரீ மயூரநாதர் ஆலயம் இருந்தமையின் உள்ளே சென்று சுவாமி சந்நிதானத்தில் நமஸ்காரம் செய்துவிட்டுச் சென்றோம்.

அ. ஈரிதழ் ஒலிகள் இடம்பெற்ற சொற்கள் 04 தருக.

ஆ. இதில் இடம்பெற்றுள்ள கிரந்த எழுத்துக்களை எடுத்துக்காட்டுக.

இ. தந்தையார் எனும் சொல்லில் இடம்பெறும்- ஆர் விகுதி எப்பொருளில் வந்துள்ளது?

ஈ. சந்நிதானத்தில் என்னும் சொல்லைப் பிரித்துக்காட்டி இதில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி அகப்புணர்ச்சியா? புறப்புணர்ச்சியா?என குறிப்பிடுக.

உ. உடன்படுமெய் தோன்றிப் புணர்ந்துள்ள இரண்டு சொற்களை எடுத்துக்காட்டுக.

03. 01. பின்வரும் வாக்கியங்களில்- இல் வேற்றுமை உருபாக இடம்பெறும் சொற்களை எடுத்து காட்டுக.

அ. மணியும் அவனும் கலாசாலையில் சேர்ந்து படித்தவர்கள்.

ஆ. அவளை அவன் அதுவரையில் பார்த்தது கூட இல்லை.

இ. அந்த மாதம் முழுவதும் ராமு சென்னையில் இல்லை.

2. பின்வரும் வினையடிகளை செய்ய எனும் வாய்ப்பாட்டு வினை எச்சமாக எடுத்துக் காட்டுக.

பார், எழுது, நில், காட்டு

3. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் துணைவினைகளை எடுத்துக் காட்டுக.

சாரதா வீட்டு வேலைகளைசச் செய்து முடித்துவிட்டு அறையில் தலைவாரிப் பின்னிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.